***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

**OS.No. 4/2018**

P.W.1 திரு.மணி த/பெ.சுப்பையா நாள் – 09.02.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலகத்தில் இருந்து வா .சா.ஆ.99 முதல் 102 வரையிலான ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் குழந்தைகள் 1985 வரை கோங்குடியில் உள்ள பள்ளியில் படித்தார்கள் என்று காட்டுவதற்கான ஆவணங்கள் ஆகும். அதற்கு பின்னிட்டு அவர்கள் எங்கு படித்தார்கள என்றால் கடைசி இரண்டுபிள்ளைகள் கண்டனூரில் படித்தார்கள் . நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.15 முதல் வா .சா.ஆ.36 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் 1982 முதல் 2007 ற்குள் வாங்கப்பட்டது என்றால் சரிதான் . B– அட்டவணை சொத்துக்கள் சென்ட் கணக்கில் வாங்கப்பட்டதா அல்லது சதுரடி கணக்கில் வாங்கப்பட்டதா என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . மேற்படி சொத்துக்களைப் பொறுத்து கிரயம் கொடுத்தவர்கள் மற்றும் கிரயம் பெற்றவர்களை கேட்டால் தான் விவரம் தெரியும் என்றால் சரிதான் . நான் ஆவணங்களை படித்து தெரிந்து கொண்டேன் . 1ம் பிரதிவாதி எனது பிள்ளைகளின் திருமணத்திலும் , 1ம் பிரதிவாதியின் பிள்ளைகளின் திருமணத்தில் நானும் கலந்து கொண்டோமா என்றால் 1ம் பிரதிவாதியின் பிள்ளைகளின் திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன் , எனது பிள்ளைகளின் திருமணத்திற்கு அவர் வரவில்லை . எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லாததால் தான் அவர் வரவில்லை என்றால் அவருக்கு வர பிடிக்கவில்லை,அதனால் அவர் வரவில்லை . எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும்

1996ல் இருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல . அவரது பிள்ளைகளின் திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்றும் , வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மில், வீடு உள்ள இடம் எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இடத்தை 1ம் பிரதிவாதி பெயரில் வாங்குவதற்கு நானோ , சகோதரரோ ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான் . எனது தகப்பனார் 2007ம் வருடம் இறந்துவிட்டார் . எனது தகப்பனார் இறக்கும் வரையில் அவர் தான் பொதுக்குடும்ப சொத்துக்களை மேற்பார்வை செய்து வந்தார் என்றால் இல்லை , கர்த்தா என்ற முறையில் எனது அண்ணன் மேற்பார்வை செய்தார். எனது தகப்பனார் தான் சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்தார் என்றும் , என் அண்ணன் கர்த்தாவாக சொத்துக்களை நிர்வாகம் செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா அ–அட்டவணை சொத்தில் மட்டும் தான் எனக்கு பாகம் உண்டு என்றும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டில் எனக்கு எந்த பாகமும் இல்லை என்றால் சரியல்ல . தாவா அ–அட்டவணை சொத்து வரிசை எண் .42ல் கட்டப்பட்டுள்ள வீடு 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் இல்லை . தாவா அ–அட்டவணை சொத்து வரிசை எண் .9ல் கட்டப்பட்டுள்ள வீடு 1ம் பிரதிவாதியால் கட்டப்பட்டது என்றும், அதனால் அதில் எனக்கு எந்த பாகமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல . ஆ முதல் உ அட்டவணை சொத்துக்களுக்கு எவ்வளவு பேசினார்கள் , எவ்வளவு பணம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றும் , அது பற்றி 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தான் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . ஆ முதல் உ அட்டவணை சொத்துக்கள் எதுவும் பொதுக்குடும்ப சொத்துக்கள் அல்ல என்றும், அவை 1ம் பிரதிவாதி மற்றும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சுயாஜித சொத்துக்கள் என்றும், அதனால் தான் அந்த சொத்துக்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல , அவை கர்த்தா என்ற

முறையில் 1ம் பிரதிவாதியால் வாங்கப்பட்ட சொத்து ஆகும். ஆ முதல் உ அட்டவணை சொத்துக்களில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு வழக்குரையின்படி எந்த சொத்துக்களும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு 1988ம் வருடம் திருமணம் நடந்தது. எனக்கு 1983ம் ஆண்டு வேலை கிடைத்தது. 1983 முதல் மின்சார வாரியத்தில் தான் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். வேலை கிடைத்தவுடன், வேலை நிமித்தமாகவும், திருமணத்திற்கு பின்னிட்டும் புதுக்கோட்டையில் குடியேறிவிட்டேன் என்றால் இல்லை, கடியாப்பட்டியில் 1995ம் ஆண்டு வரை இருந்தேன். வழக்குரையில் சொல்லியுள்ள புதுக்கோட்டை முகவரியில் உள்ள வீடு எனது சொந்த வீடு என்றால் சரிதான். இந்த வீட்டை எப்போது கட்டினேன் என்றால் 2000ம் ஆண்டு கட்டினேன். இந்த வழக்கு 2017ல் தாக்கல் செய்யப்பட்டது. புதுக்கோட்டை முகவரியில் உள்ள எனது வீட்டை வழக்கு சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். எனது அப்பா 2007ல் இறந்துவிட்டார். B அட்டவணை சொத்து வாங்கப்பட்ட காலக்கட்டத்தில் எனது தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் B அட்டவணை சொத்து வாங்கப்பட்டபோது 1ம் பிரதிவாதி கர்த்தா என்ற முறையில் வாங்கவில்லை என்றும், அது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்து 1982ற்கு பிறகு தொடர்ச்சியாக வாங்கப்பட்டது. எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் நான் என் தகப்பனார் அடங்கிய குடும்பத்திற்கு எனது தகப்பனார் தான் மூத்தவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குடும்பத்தின் கர்த்தா என்று

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா 2007 ல் இறக்கும் வரை நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்து சுமார் 10 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . 1982 ல் B அட்டவணை சொத்தை எனது அண்ணன் வாங்கி சமயத்தில் இருந்த மதிப்பிற்கும் , 2017 ல் வழகககு தாக்கல் செய்யும் காலத்தில் வழக்கு சொத்துக்களுக்கு மதிப்பு அதிகமாகிவிட்டது என்றால் சரிதான் . மதிப்பு அதிகமானதால் ஆ முதல் உ வரையுள்ள சொத்துக்களை அடைய பொய்யான சங்கதிகளை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . எனக்கு 1988 ல் திருமணமானதிலிருந்து எங்கள் குடும்பத்தில் இருந்து தனித்தனியாக தான் மொய் எழுதுவோம் என்றால் சரிதான். எனது சகோதரர்கள் தனித்தனியாக மொய் எழுதுவார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது . நாங்கள் பொதுக்குடும்பமாக இருந்திருந்தால் தனிப்பட்ட முறையில் மொய் எழுதியிருக்க மாட்டோம் என்றும், பொதுவாக தான் மொய் எழுதியிருப்போம் என்றும் சொன்னால் சரியல்ல . 2, 3 பிரதிவாதிகளின் முகவரியாக காண்பிக்கப்பட்டுள்ள கதவு எண்.118/3.2 என்பது அ–அட்டவணை சொத்து என்றால் சரிதான். அ–அட்டவணை சொத்தில் 2 ம் பிரதிவாதி புது வீடு கட்டியுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து பொதுக்குடும்ப சொத்து என்றும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல . அ–அட்டவணை சொத்தில் மட்டும் தான் எனக்கு பாகம் உண்டு என்றும் , தாவா மற்ற சொத்துக்களில் எனக்கு பாகம் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல . அ–அட்டவணை சொத்தில் 42 வது அயிட்டத்தில் 2 ம் பிரதிவாதி கட்டியுள்ள வீட்டில் எனக்கு பாகம் கிடையாது என்றால் சரியல்ல . அ–அட்டவணை சொத்த்தில் 2 ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ள சொத்து நத்தம் இடம் என்றும் , மற்றவை அனைத்தும் நஞ்சை நிலம் என்றும் சொன்னால் சரிதான் . நான் சொல்வதுபோல் அ–அட்டவணை சொத்தில் அதிக வருமானம் எதுவும் இல்லை என்றும், அதில் இருந்து வந்த வருமானத்தை வைத்து மற்ற தாவா சொத்துக்கள்

வாங்கியிருக்க இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே தாவா சொத்துக்கள் அனைத்தும் பொதுக்குடும்ப சொத்துக்கள் என்று கூறும் நான் , நான் புதுக்கோட்டையில் எனது பெயரில் கட்டியிருக்கும் சொத்தையும் வழக்கு சொத்தாக காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுடன் நீண்ட காலமாகவே நான் சுமூகமான உறவில் இல்லை என்றால் சரியல்ல . அவர்களை கஷ்டப்படுத்தவேண்டுமென்ற காரணத்திற்காக இந்த பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . 9, 10, 11 பிரதிவாதிகளுக்கு நான் எவ்வித சீர்வரிசைகளும் செய்யவில்லை என்றால் சரியல்ல . அவர்களுடனும் நான் நல்ல உறவில் இல்லை என்றால் சரியல்ல.

**1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 9 முதல் 11 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*